# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 447/17//பே

ஆணை எண்: 208/2017/நாள்: 1–09–2017

திரு. பிரான்சிஸ்,
செயற்குழு உறுப்பினர், (LAMP).
19/177 தேவி நிலையம்,
பெருந்தெரு, குழித்துறை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 163. — முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
உண்ணாமலைக்கடை பேரூராட்சி,
விரிகோடு, மார்த்தாண்டம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் (மற்றும்)
அலுவலக குமாஸ்தா,
(கடித போக்குவரத்து)
உண்ணாமலைக்கடை பேரூராட்சி. — எதிர் மனுதாரர்கள்

## ஆணை

திரு. பிரான்சிஸ், செயற்குழு உறுப்பினர் (LAMP) அவர்களின் 29.03.2017ம் நாளிட்ட முறையீட்டு மனுவில் தான் ஏற்கனவே திரு. டி. டென்னிஸ், எருமகுட்டிவிளை வீடு, ஞாறாம்விளை, பாகோடு என்ற தனி நபர் நடத்தும் செங்கல் தொழிற்சாலை குறித்து பேரூராட்சி செயல் அலுவலர், அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் பேரூராட்சியால் ஏற்கப்படாமல் தனக்கே திருப்பப்பட்டு விட்டதாக தெரிவித்து, நடவடிக்கை எடுக்கக் கேட்டு செயல் அலுவலருக்கு முகவரியிட்ட உறை பிரிக்கப்படாமல் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுதாரர் அனுப்பியுள்ளார். செயல் அலுவலர் தனது 05.08.2017–ம் நாளிட்ட விளக்க அறிக்கையில் மனுதாரர் கூறியுள்ள கடிதம் பேரூராட்சியின் ஆவணங்களின்படி தங்களுக்கு வரப்பெறவில்லை என

தெரிவித்துள்ளது ஏற்கத் தக்கதல்ல. மேற்படி பிரிக்கப்படாத உறையில் பெறப்படவில்லை **(Undelivered )** என அஞ்சல் துறையால் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனுப்பும் எந்த கடிதத்தினையும் பெற்று விதிகளின்படி நடவடிக்கை எடுப்பதும், சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு விவரம் தெரிவிப்பதும் அரசு பணியாளர்களின் தலையாய கடமை. ஆனால் செயல் அலுவலர் மற்றும் அலுவலகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பணியாளர்கள் தபாலை பெறாமல் திருப்பி அனுப்பியிருப்பது மிகவும் கண்டிக்கத் தக்கதென உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் முடிவு செய்கிறது. திருப்பி அனுப்பப்பட்ட மனுதாரரின் தபால், பிரிக்கப்படாத நிலையிலேயே செயல் அலுவலருக்கு அனுப்பப்படுகின்றது. மனுவினை பரிசீலித்து உரிய நடவடிக்கை விதிகளின்படி எடுத்து மனுதாரருக்கு தெரிவிக்குமாறு செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

இணைப்பு – ஒன்று. **தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–/ஆணைப்படி – அனுப்பப்படுகிறது./–

செயலாளர் 15/9/17

**பெறுநர்**

1.திரு. பிரான்சிஸ்,
செயற்குழு உறுப்பினர், (LAMP).
19/177 தேவி நிலையம்,
பெருந்தெரு, குழித்துறை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
உண்ணாமலைக்கடை பேரூராட்சி,
விரிகோடு, மார்த்தாண்டம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 163.